**SAKTHI MARKETING**
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
इंडियनऑयल IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் ஐப்பசி 22 | MAALAI EXPRESS | ஹிஜிரி 1446 ஜமாதுல் அல்வல் 5

மாநிலம் பயனுற!

**மல்டிகலர் பைகள்**

துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

● புதுச்சேரி ● வெள்ளிக்கிழமை, நவம்பர் 8, 2024 ● வெளியூர்: 9-11-2024, சனிக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 121 ● 6 பக்கம் ● ரூ.6

# சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை ஆலோசனை கூட்டம்




## விலையில்லா பொருட்கள் மாணவர்களை சென்றடைந்ததா என ஆய்வு

**சென்னை, நவ. 8-**
சென்னை தலைமை செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் பள்ளிக்கல்வித்துறை ஆலோசனை கூட்டம் தொடங்கியது.

ஆலோசனையில் அமைச்சர் அன்பில் மகேஷ், பள்ளிக்கல்வித்துறை இயக்குநர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர். கூட்டத்தில், மாணவர்களின் இடைநிற்றல் விகிதத்தை குறைப்பது, பொதுத்தேர்வுக்கு மாணவர்களை தயார் செய்வது குறித்தும் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

புத்தகம், சீருடை, மிதிவண்டி உள்ளிட்ட விலையில்லா பொருட்கள் மாணவர்களை சென்றடைந்ததா என ஆய்வு நடத்தப்படும்.

அரசு பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்துவது குறித்து ஆலோசிக்கப்படுவதாக தகவல் வெளியாகி உள்ளது.

## ஜம்முகாஷ்மீர் சட்டசபையில் இன்றும் அமளி எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்கள் வெளியேற்றம்

**ஸ்ரீநகர், நவ. 8-**
ஜம்முகாஷ்மீர் சட்டசபையின் முதல் கூட்டத்தொடர் 6 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக கடந்த 4ந்தேதி தொடங்கியது. கூட்டத்தொடர் தொடங்கியதும் தேசிய மாநாட்டு கட்சியின் மூத்த தலைவரும், 7 முறை எம்.எல்.ஏ.வுமான அப்துல் ரஹீம், சபாநாயகராக தேர்வு செய்யப்பட்டார்.

ஜம்மு காஷ்மீர் சட்டசபை நேற்று முன்தினம் கூடிய போது காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்குவது தொடர்பான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இதையடுத்து பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதால் முன்தினம் நாள் முழுவதும் அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று கூடிய சட்டசபையில், என்ஜினீயர் ரஷீத்தின் சகோதர குர்ஷித் அகமது, சிறப்பு அந்தஸ்தை ஆதரித்து பதாகையை காண்பித்ததால் சட்டசபையில் எம்.எல்.ஏ.க்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டது. இதனால் அவை நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில், இன்று காலை மீண்டும் கூடிய சட்டசபை கூட்டத்தில் 3வது நாளாக 370வது சட்டப்பிரிவை மீண்டும் அமல்படுத்த கோரும் தீர்மானத்துக்கு பாஜக எம்.எல்.ஏ.க்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து அமளியில் ஈடுபட்டனர். பாஜக எம்.எல்.ஏ.க்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிடிபி எம்.எல்.ஏ.க்கள் முழக்கம் எழுப்பியதால் சட்டசபையில் சலசலப்பு ஏற்பட்டது. அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்கள் குண்டுக்கட்டாக வெளியேற்றப்பட்டனர்.

## சென்னையில் தங்கம் விலை சவரனுக்கு ரூ.680 உயர்வு

**சென்னை, நவ. 8-**
தங்கம் விலை கடந்த சில வாரங்களாக தொடர்ந்து உயர்ந்து கொண்டே வந்தது. கடந்த செப்டம்பர் மாதம் 24ந்தேதி ஒரு பவுன் ரூ.56 ஆயிரத்தை கடந்தது.

அதன் தொடர்ச்சியாக விலை உயர்ந்து, அக்டோபர் மாதம் 16ந்தேதி ஒரு பவுன் ரூ.57 ஆயிரம் என்ற நிலையையும் தாண்டி, புதிய உச்சத்தில் தங்கம் விற்பனை செய்யப்பட்டதை பார்க்க முடிந்தது. அதனைத் தொடர்ந்தும் விலை குறைந்தபாடில்லை. ஒவ்வொரு நாளும் உச்சத்திலேயே தங்கம் விலை பயணித்தது.

கடந்த மாதம் இறுதி வரை உச்சத்தில் இருந்த தங்கம் விலை, இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து சற்று குறைய ஆரம்பித்தது. கடந்த 5ந்தேதி வரை குறைந்து கொண்டே வந்த நிலையில், நேற்று அதிரடியாக தங்கம் விலை சரிந்து காணப்பட்டது.

நேற்றைய நிலவரப்படி, கிராமுக்கு ரூ.165ம், சவரனுக்கு ரூ.1,320ம் குறைந்தது. ஒரு கிராம் ரூ.7 ஆயிரத்து 200க்கு விற்பனை ஆனது. நேற்று ஒரு பவுன் தங்கம் ரூ.57 ஆயிரத்து 600க்கும் விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.680 உயர்ந்து ரூ.58 ஆயிரத்து 280க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.85 உயர்ந்து ரூ.7,285க்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.1 உயர்ந்து ரூ.103க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் கைது



**சென்னை, நவ. 8-**
கனடாவில் இந்து கோவிலுக்குள் பக்தர்கள் தாக்கப்பட்டதை கண்டித்து இந்து மக்கள் கட்சி தலைவர் அர்ஜூன் சம்பத் போராட்டம் நடத்த இருந்தார். இந்துக்களை தாக்கிய காலிஸ்தான் பயங்கரவாதிகளை அடக்க கனடா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வலியுறுத்தி போராட்டம் நடத்தப்பட இருந்தது. இந்நிலையில் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் போராட்டத்திற்கு முன்பே அர்ஜூன் சம்பத் உள்பட 11 பேரை போலீசார் கைது செய்தனர்.

முன்னதாக, கனடாவில் வசித்த காலிஸ்தான் அமைப்பு தலைவர் நிஜ்ஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியதால் இரு நாடுகள் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் இவ்விவகாரத்தில் இந்திய தூதரக அதிகாரிகள் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகளை கனடா கூறியது. இதற்கிடையே கனடாவின் பிரம்ப்டன் நகரில் இந்து கோவிலுக்குள் காலிஸ்தான் ஆதரவாளர்கள் புகுந்து பக்தர்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஜம்மு-காஷ்மீரில் நடந்த என்கவுன்டரில் 2 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை




**ஸ்ரீநகர், நவ. 8-**
ஜம்முகாஷ்மீர் பாரமுல்லா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து நேற்று மாலை மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் போலீசார் மற்றும் பாதுகாப்புப்படையினர் அதிரடி தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு பதுங்கியிருந்த 2 பயங்கரவாதிகளை பாதுகாப்புப்படையின் சுட்டுக்கொன்றனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்கள், வெடிபொருட்கள் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அவர்களின் அடையாளம் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது என்று போலீசார் இன்று தெரிவித்துள்ளனர்.

## விண்ணை பிளந்த அரோகரா கோஷம் சூரபத்மனை வதம் செய்த முருகப் பெருமான்



**தூத்துக்குடி, நவ. 8-**
திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெறும் பல்வேறு திருவிழாக்களில் முக்கிய திருவிழாவான கந்த சஷ்டி திருவிழா கடந்த 2ந் தேதி யாகசாலை பூஜையுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது. விழாவில் ஒவ்வொரு நாளும் காலை 7மணிக்கு யாக பூஜை

5-ம் பக்கம் பார்க்க

கற்பி! ஒன்றுசேர்! புரட்சி செய்!

அரிமா, நல்லாசிரியர் **மு. சுந்தரமூர்த்தி,**
முதல்வர் - பணிநிறைவு அவர்களின்
**70 ஆவது பிறந்தநாள் முனைவர் பட்டம் பாராட்டு விழா**



நாள் : **12.11.2024, செவ்வாய்க்கிழமை**
நேரம் : மாலை 6.00 மணி
இடம் : **புதுவைத் தமிழ்ச் சங்கம்,** வெங்கட்டா நகர், புதுச்சேரி.

வரவேற்புரை : முனைவர் திரு. **பா. ஜான்ராஜ்குமார்**
நிறுவனர், ஜே.கே.சி அறக்கட்டளை, திருச்சி.

தலைமை : பேராசிரியர் முனைவர் திரு. **எ.மு. ராஜன்**
முதல்வர், பணிநிறைவு, தாகூர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, புதுச்சேரி.

முன்னிலை : திரு **நெ. இராமச்சந்திரன்**
காவல்துறை கண்காணிப்பாளர், பணிநிறைவு, புதுச்சேரி.

நிகழ்ச்சித் தொகுப்பு : திரு **தி. கோவிந்தராசு**
வழக்கறிஞர், புதுச்சேரி.

வாழ்த்துரை : தேசிய நல்லாசிரியர் திருமதி **கி. திலகவதி**
ஆசிரியை - பணிநிறைவு, புதுச்சேரி.
தேசிய நல்லாசிரியர் முனைவர் திரு. **இரா. வெற்றிவேல்**
தலைமை ஆசிரியர் - பணிநிறைவு, புதுச்சேரி.
நல்லாசிரியர் திரு. **ஆ. குப்புசாமி**
தலைமை ஆசிரியர் - பணிநிறைவு, புதுச்சேரி.

பாராட்டுரை : முனைவர் திரு. **வி. முத்து**
தலைவர், புதுவைத் தமிழ்ச் சங்கம், புதுச்சேரி.
நல்லாசிரியர் செல்வி. **அ. ஹேமாவதி**
தலைமை ஆசிரியர் - பணிநிறைவு, புதுச்சேரி.
திரு. **துரை. இலட்சுமணன்**
உதவி இயக்குனர், சுற்றாலத்துறை - பணிநிறைவு, புதுச்சேரி.

சிறப்புரை : திருமிகு. **ஏ. கிருஷ்ணமூர்த்தி**
முதல்வர் - பணிநிறைவு, புதுச்சேரி.

ஏற்புரை : அரிமா, நல்லாசிரியர், முனைவர் திரு. **மு. சுந்தரமூர்த்தி**
முதல்வர் - பணிநிறைவு, புதுச்சேரி.

நன்றியுரை : பேராசிரியர், முனைவர் திருமதி. **அபர்ணா சுந்தரமூர்த்தி**
தேசிய பாதுகாப்புப் பல்கலைக் கழகம், புதுச்சேரி.

அனைவரும் வருக! அரங்கம் நிறைக!

# மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் பிறந்தநாள் விழா



புதுக்கோட்டை, நவ. 8-

புதுக்கோட்டையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் பிறந்தநாள் விழா மாவட்ட செயலாளர் ராஜகோபால் தலைமையில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதில் புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரிக்கு கட்சியின் மண்டல அமைப்பாளர் செந்தில்குமார் தனது உடலையும், உடல் உறுப்புகளையும் தானம் வழங்க பதிவு செய்தார். மேலும், ஜெய் பார்த்தீபன், கார்த்தி ஆகியோர் உடல் உறுப்புகள் தானம் வழங்க பதிவு செய்தனர்.

புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கியில் கட்சியினர் இரத்த தானம் வழங்கினார்கள். அதன் பின்னர் அன்னை சத்யா அம்மையார் நினைவு அரசு குழந்தைகள் காப்பகத்தில் உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்வுகளில் பொருளாளர் முருகவேல், ஒன்றிய செயலாளர் சுந்தர் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# கோவையில் ரூ.126 கோடியில் தங்க நகை தொழில் வளாகம்: முதல்வருக்கு நன்றி



கோவை, நவ. 8-

கோவை குறிச்சியில் உள்ள தொழிற்பேட்டையில் ரூ.126 கோடியில் தங்க நகை தொழில் வளாகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இந்நிலையில் தங்க நகை தொழிலாளர்களின் வாழ்வாதாரத்திற்காகவும் தொழிலின் அடுத்த கட்ட வளர்ச்சிக்காகவும் கோவையில் தங்க நகை தொழில் வளாகம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்ட தமிழக முதல்வர் மு.க ஸ்டாலினுக்கு கோயம்புத்தூர் ஜுவல்லரி கிளஸ்டர் சார்பில் அதன் தலைவர் சி.என் சீனிவாசன், மேலாண்மை இயக்குனர் டி.செந்தில்குமார் நிதி இயக்குனர் எஸ்.சீனிவாசன் ஆகியோர் நன்றி தெரிவித்தனர். மேலும் எங்களது ஜிவல்லரி கிளஸ்ட்டரை பொற்கொல்லர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக் கோரிக்கை வைத்தனர். கோயம்புத்தூர் தங்க நகை கிளஸ்டர் திட்டத்திற்கு உறுதுணையாக இருந்த மாவட்ட தொழில் மையம் கோயம்புத்தூர் சிட்கோ, சென்னை டான்சிட்கோ, எம்எஸ்எம்இ உள்ளிட்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம் என்றனர்.

நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் ஜுவல்லரி கிளஸ்டர் இயக்குனர்கள் பிரேம்குமார், சுப்புராஜ், பி. காளியப்பன், ஆர்.பி சண்முகம், எம்.ரமேஷ், பி.ராமமூர்த்தி, வைரவமூர்த்தி மற்றும் பங்குதாரர்கள் ஆர்.அய்யாதுரை, எஸ்.தனபாலன், எம்.விஜயகுமார், ராம் பிரகாஷ், வெங்கடாசலம், அர்ஜுன், வெங்கடேஸ்வரன், ஆறுமுகம், செல்வம், சீனிவாசன், பாலசுப்பிரமணி, ராஜ்ஸ்ரீதர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில் திருக்கல்யாணம்



சுவாமிமலை, நவ. 8-

அறுபடை வீடுகளில் ஒன்றான சுவாமிமலை சுவாமிநாத சுவாமி கோயிலில் கந்த சஷ்டி விழாவை முன்னிட்டு ஆறாம் நாள் விழாவாக சூரசம்ஹாரம் நடைபெற்றது. காலையில் படிச்சட்டத்தில் ஸ்ரீ வள்ளி தேவசேனா உடனுறை சண்முகர் சுவாமி படிச்சட்டத்தில் எழுந்தருளி, ஸ்ரீசந்திரசேகர் ஸ்ரீவீரபாகு ஸ்ரீவீரகேசரி ஆகியோருடன் வீதியுலா வந்தார். பின்னர் 108 சங்காபிஷேகத்துடன் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது.

மாலையில் தங்கமயில் வாகனத்தில் ஏறி ஸ்ரீசண்முகர் சுவாமி மீனாட்சி சொக்கநாதர் அம்பாளிடம் வேல்வாங்கினார். பின்னர் சூரசம்ஹாரம் செய்ய வாகனத்தில் வீதியுலா சென்று, ஸ்ரீவீரபாகு, ஸ்ரீவீரகேசரி பரிவாரங்களுடன் தேரடி வீதியில் பத்மாசுரனின் முதல் தலையையும், கீழவீதியில் இரண்டாவது தலையையும், சன்னதி தெருவில் மூன்றாவது தலையையும் வதம் செய்தார். அப்போது ஏராளமான ஆண், பெண் பக்தர்கள் முருகனுக்கு அரோகரா என்று முழக்கமிட்டனர். சூரனை வதம் செய்த பின் தங்கமயில் வாகனத்தில் வீதியுலா வந்த ஸ்ரீ சண்முகர் மீண்டும் படிச்சட்டத்தில் எழுந்தருளினார். அங்கு அவருக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இன்று (வெள்ளிக்கிழமை) மாலையில் திருக்கல்யாணம் நடைபெறுகிறது.

ஏற்பாடுகளை இந்து சமய அறநிலையத் துறை துணை ஆணையரும், செயல் அலுவலருமான தா.உமாதேவி, கண்காணிப்பாளர்கள் பழனிவேல், எம்.தமிழரசி மற்றும் பணியாளர்கள் செய்தனர். டிஎஸ்பி ஜி.கீர்த்திவாசன் தலைமையில் போலீஸார் பாதுகாப்பு செய்தனர். பேரூராட்சி நிர்வாகம் சார்பில் சுகாதாரம், குடிநீர் வசதிகள் செய்யப்பட்டிருந்தது.

# முன்னாள் படை வீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படை வீரர் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

# மாணவனுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கல்



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் அகில இந்திய தொழிற் தேர்வில் தமிழக அளவில் கடைசலர் பிரிவில் முதலாம் இடம் பிடித்த கோணம் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர் அரவிந்த்துக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி, வாழ்த்தினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பாலசுப்பிரமணியம்.

# சுண்ணாம்பு ஓடையில் தூர்வாரும் பணி



ஈரோடு மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1, சுண்ணாம்பு ஓடையில் தூர்வாரப்பட்டுள்ள பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா.

# ஊராட்சி அலுவலக கட்டடம் திறப்பு



வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், வெப்பாலையில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம்1ன் கீழ் ரூ. 29.40 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வெப்பாலை ஊராட்சி மன்ற புதிய அலுவலக கட்டடத்தை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். அருகில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி, காட்பாடி ஒன்றியக்குழுத்தலைவர் வேல்முருகன்.

# பயிர் காப்பீட்டிற்கு பதிவு செய்ய விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

புதுச்சேரி, நவ. 8-

நெல் சாகுபடி செய்த விவசாயிகள், பயிர் காப்பீடு செய்ய அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும் என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து தட்டாஞ் சாவடி கூடுதல் வேளாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, புதுச்சேரி வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை, மத்திய அரசின், பசல் பிமா யோஜனா என்ற பயிர் காப்பீடு திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் நெல், மணிலா, பயிறு வகைகள், கரும்பு, பருத்தி, வாழை ஆகிய பயிர்கள் காப்பீடு செய்யப்படுகின்றது.

இதில், விதைப்பு பொய்த்தல், அறுவடைக்கு பின் ஏற்படும் இழப்புகள், பகுதி சார்ந்த பல்வேறு இயற்கை இடர்பாடுகளுக்கு காப்பீடு வழங்கப்படுகின்றன. விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியம் தொகை முழுவதையும், புதுச்சேரி அரசு செலுத்துகின்றது. ரபி பருவம் (சம்பா பருவத்தில்) நெல் சாகுபடி செய்த விவசாயிகள், பயிர் காப்பீடு செய்ய, பூர்த்தி செய்த காப்பீடு விண்ணப்பங்களை, உழவர் உதவியகத்தில் பணிபுரியும் வேளாண் அலுவலர்கள் மூலமாக பொது சேவை மையத்தில் அடுத்த மாதம் 15ம் தேதிக்குள் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# பொதிகை புத்தகத் திருவிழா 'லோகோ' வெளியீடு




தென்காசி, நவ. 8-

தென்காசி மாவட்டத்தில் 15.11.2024 முதல் 24.11.2024 வரை தென்காசி இ.சி.ஈஸ்வரன்பிள்ளை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ள 3வது பொதிகை புத்தகத் திருவிழாவினை முன்னிட்டு பொதிகை புத்தகத் திருவிழாவின் லோகோவினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் வெளியிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது, தமிழ் சமுதாயத்தை அறிவார்ந்த நிலைக்கு உயர்த்துவதில் புத்தக வாசிப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. புத்தக வாசிப்பை ஒரு மக்கள் இயக்கமாக எடுத்துச் செல்ல சென்னை புத்தகக் காட்சி போன்று தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் புத்தகக் கண்காட்சிகள் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்படி புத்தக கண்காட்சியினை நவம்பர் 15 அன்று மாலை 5 மணி அளவில் அமைச்சர் பெருமக்கள் தொடங்கி வைத்து விழாப் பேருரை யாற்ற உள்ளனர். மேற்படி, இவ்விழாவில், தென்காசி பாராளுமன்ற உறுப்பினர், தென்காசி, சங்கரன்கோவில், வாசுதேவநல்லார், ஆலங்குளம் கடையநல்லூர் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

புத்தக கண்காட்சியில் அறுபதுக்கும் மேற்பட்ட புத்தக பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களின் அரங்குகள் அமைக்கப்பட உள்ளன. நாள்தோறும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகளும், கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளது. மாணவர்களிடையே வாசிப்பினை அறிமுகம் படுத்தும் விதமாக பல்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற அனைவருக்கும் புத்தகப் பரிசு கூப்பன்கள் வழங்கப்பட உள்ளது.

புத்தக வாசிப்பை ஊக்குவிக்கும் விதமாக சாகித்ய அகாடமி விருதுகள் பெற்ற படைப்பாளிகள், யுவ புரஸ்கார் மற்றும் கலைமாமணி விருதுகள் பெற்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த கலைஞர்கள் இலக்கிய உரைகள் நிகழ்த்த உள்ளனர். மேலும் வாசிப்பின் அவசியத்தை பொது மக்களிடம் கொண்டு சேர்க்கும் விதமாக முன்னணி பட்டிமன்ற பேச்சாளர்கள் நாள்தோறும் மாலையில் தனி உரைகள் நிகழ்த்த உள்ளனர். புத்தகத் திருவிழாவினை சிறப்பிக்கும் விதமாக தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த பல்வேறு கலைஞர்களால் தினந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

எனவே, பொதுமக்கள் இந்த புத்தகத் திருவிழாவிற்கு வருகை தந்து பயன்பெற வேண்டுமென தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட நூலகர் சண்முகசுந்தரம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அமிர்தலிங்கம் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கவுசிக பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சூரசம்ஹார விழா





புதுச்சேரி, நவ. 8-

புதுச்சேரி கவுசிக பாலசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சூரசம்ஹாரம் விழா நேற்று இரவு நடந்தது.

புதுச்சேரி ரயில் நிலையம் எதிரே உள்ள பிரசித்தி பெற்ற வள்ளி தேவசேனா உடனுறை கவுசிகபாலசுப்ரமணியசாமி கோவில் உள்ளது. இக்கோவிலில் 72வது ஆண்டு கந்த சஷ்டி சூரசம்ஹார திருக்கல்யாண உற்சவம் கடந்த 1ம் தேதி விநாயகர் பூஜை, கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இதனைத் தொடர்ந்து தினமும் காலை மற்றும் மாலையில் உற்சவர் நித்தம் ஒரு வாகனத்தில் விதி உலா செல்லும் நிகழ்ச்சி நடைபெற்றது.

5ம் நாள் அன்று சிங்க வாகனம், இரவில் சூரனை சம்ஹாரம் செய்ய அன்னை சக்தியிடம் முருகன் வேல் வாங்குதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த வைபவத்தின் போது உற்சவமூர்த்தி முகத்தில் முத்து முத்தாக வியர்வை துளிகள் ஏற்பட்டது. இதனை கண்ட பக்தர்கள் பக்தி பரவசத்துடன் பக்தி கோஷங்களை எழுப்பினர்.

இந்நிலையில் நேற்று இரவு 8 மணிக்கு, முக்கிய நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் விழா நடைபெற்றது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

இதனைத் தொடர்ந்து இன்று காலை திருக்கல்யாண வைபவம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து 12ம் தேதி வேதபுரீஸ்வரர் கோவில் குளத்தில் தெப்பல் உற்சவமும், முத்து விமானம், முத்து பிரபை, முத்து பல்லக்கு நிகழ்ச்சியும் நடைபெறுகிறது. 19ம் தேதி ஊஞ்சல் உற்சவம் நடைபெறும். விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் பரிபாலகர் காதர், கோவில் அர்ச்சகர் ஞானசேகர், ராஜேஷ்குமார் மற்றும் விழாக்குழுவினர் செய்து வருகின்றனர்.

# புதுச்சேரியில் நாளை முதல் 2 நாட்கள் வாக்காளர் சிறப்பு முகாம்

## தலைமை தேர்தல் அதிகாரி ஜவகர் தகவல்

புதுச்சேரி, நவ. 8-

புதுச்சேரி மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து ஓட்டுச் சாவடிகளிலும் நாளையும், நாளை மறுநாளும் வாக்காளர் சிறப்பு முகாம் நடக்கிறது.

இதுகுறித்து புதுச்சேரி தலைமை தேர்தல் அதிகாரி ஜவகர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி 1.01.2025 அன்று தகுதி பெரும் நாளாக கொண்டு 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்காளராக வாக்காளர் பட்டியலில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுவதற்கான வாக்காளர் பட்டியல் சுருக்கு முறை திருத்தப்பணி கடந்த 29ம் தேதி துவங்கியது. இப்பணி வரும் 28ம் தேதி வரை தொடர்ந்து நடக்கின்றது.

மேலும் 1.4.2025, 1.7.2025 மற்றும் 1.10.2025 ஆகிய தகுதி பெறும் தேதிகளில் 18 வயது பூர்த்தி ஆக உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். வாக்காளர்கள் வாக்காளர் பட்டியலில் திருத்தம், அதாவது, பெயர், பாலினம், பிறந்த தேதி, முகவரி, மொபைல் எண், புகைப் படம், பெயர், நீக்கம், திருத் தங்களை மேற்கொள்ள லாம். பொதுமக்கள் வசதிக் காக நாளை 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம் மாநிலத்தில் உள்ள அனைத்து ஓட்டுச் சாவடிகளிலும் நடக்க உள்ளது. பொதுமக்களின் வசதிக்காக மேலும் ஒரு சிறப்பு முகாம் வருகிற 23 மற்றும் 24 ஆகிய தேதிகளில் நடக்க உள்ளது.

பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொண்டு தங்கள் பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல், திருத்தங்களை செய்ய விண்ணப்பிக்கலாம். வாக்காளர் பட்டியலில் பெயரை சேர்க்க, திருத் தங்களை மேற்கொள்ளவும், நீக்கவும் voter helpline app, nvsp.in, voters.eci.in ஆகிய சேவைகள் மூலம் தகுந்த ஆவணங்களை பதிவேற்றம் செய்யலாம். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கந்த சஷ்டி பாராயணம்



சேலம், நவ. 8-

சேலம் காந்தி மைதானம் செங்குந்தர் குமாரகுரு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் செங்குந்தர் கந்த சஷ்டி விழாக்குழு சார்பில் 22 ஆம் ஆண்டு மகா கந்த சஷ்டி பாராயணம் நடைபெற்றது. காலை 6 மணிக்கு துவங்கி 36 முறை பாராயணம் நடைபெற்றது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆண்கள் பெண்கள் கலந்துகொண்டு குத்து விளக்கு ஏற்றி வைத்து கந்த சஷ்டி பாராயணம் செய்தனர். இதனைத் தொடர்ந்து மாலை சூரசம்ஹாரம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை செங்குந்தர் கந்த சஷ்டி விழாக்குழு தலைவர் முருகேசன், செயலாளர் பன்னீர்செல்வம், பொருளாளர் முருகன், துணைத் தலைவர் சுப்பிரமணியம், துணைச் செயலாளர் மயிலப்பன், கருணாநிதி நிர்வாக குழு உறுப்பினர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தனர். மேலும் இதில் அறங்காவலர் குழு தலைவர் சோமசுந்தரம், செயல் அலுவலர் விமலா, அறங்காவலர் செல்வம், முருகன் ஆகியோர் கலந்துகொண்டனர். பூஜை ஏற்பாடுகளை கோயில் அர்ச்சகர்கள் சிவ ஸ்ரீ ரமேஷ், ஜெயஸ்ரீ குப்புசாமி சிவ ஸ்ரீ திருமுருகன், குமரகிரி முன்னாள் அறங்காவலர் செந்தில்நாதன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். இதனை தொடர்ந்து கலந்துகொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கினார்கள்.

# எஸ்பி அலுவலகத்தில் பாமகவினர் மனு




வேலூர், நவ. 8-

கடலூர் மாவட்டம் புவனகிரியில் நடந்த வீசிகாவினர் ஆர்ப்பாட்டத்தில் வன்னியர் சங்கத் தலைவர் குறித்து அவதூராக பேசியதாக கூறி வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே பாமகவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாக அறிவித்தனர். இதையடுத்து வேலூர் எஸ்பி மதிவாணன் உத்தரவு பேரில் 100 மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

வேலூர் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் பாமகவினர் திரண்டனர். அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ய போலீசார் அனுமதி அளிக்கவில்லை. தொடர்ந்து அவர்கள் எஸ்பி அலுவலகத்தில் புகார் மனு அளிப்பதாக தெரிவித்தனர். அப்போது ஊர்வலமாக செல்லக் கூடாது என்று போலீசார் அறிவுத்தினர். இதனால் பாமக நிர்வாகிகளுக்கும், போலீசாருக்கும் இடையே லேசான வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு பின் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து எஸ்பி அலுவலகத்திற்கு ஊர்வலமாக சென்று எஸ்பி இடம் புகார் மனு அளித்தனர்.

இதில் மாவட்ட செயலாளர் ஜெகன் தலைமையில் முன்னாள் அமைச்சர் எம்டி சண்முகம், மாநில துணைத்தலைவர் கே.எல் இளவழகன், மாவட்ட தலைவர் வெங்கடேசன், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் சசிகுமார் உள்ளிட்ட பலர் எஸ் பி.மதிவாணனிடம் மனு அளித்தனர்.

# செல்வமாரியம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம்



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டம் தடுத்தாட்கொண்டூர் கிராமத்தில் ஸ்ரீசெல்வமாரியம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றது.

# கலசலிங்கம் பல்கலையில் மேட்லேப் மாணவர் குழு துவக்கம்



சங்கரன்கோவில், நவ. 8-

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில், இசிஇ துறை சார்பில், "மேட்லேப் மாணவர்கள் குழு' துவக்கவிழா துணைத் தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த் தலைமையில் நடைபெற்றது.

துணைவேந்தர் முனைவர் எஸ்.நாராயணன், பதிவாளர் முனைவர் வி.வாசுதேவன். டீன்,முனைவர் பி. சிவ குமார், ஐஆர் இயக்குநர் முனைவர் சுப்ரகாஷ், மற்றும் துறைத்தலைவர் முனைவர் ஏ.முத்து குமார், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறப்பு விருந்தினர் , பெங்களூரு, டெரிட்டரி மேலாளர், அருள் செல்வம், மேட்லேப் மாணவர்கள் குழுவைக் தவக்கி வைத்து, குழுவின் முக்கியத்துவம் மற்றும் நன்மைகள் குறித்து உரையாற்றினார். மேலும்,"சுமார் 90,000 தொழிற்சாலைகள், தங்கள் பகுப்பாய்விற்கு மேட்லேப்பை பயன்படுத்துகின்றன", என்றார்.

மேத்ஓர்க்ஸ், மேலாளர், தரிணி ராஜ், ஏஆர்ஆர் நிறுவன மேலாளர் கவுதம் ராஜ்மோகன், குழு செயல்பாடுகள் குறித்து பேசினர். முனைவர் ஜே.ஜோஸ்பின் செல் வரவேற்புரையாற்றி முனைவர். பி.பெருமாளுடன் ஒருங்கிணைத்து விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். முனைவர் பென்னிலோ பெர்னாண்டஸ் நன்றி கூறினார்.

# அரசியல் தலைவர்களை தரக்குறைவாக பேசி வரும் சீமான் தன்னை திருத்திக்கொள்ள வேண்டும்

## அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அறிவுரை



தென்காசி, நவ. 8-

தென்காசி மாவட்டத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் பொதுச்செயலாளர் டிடிவி குற்றாலத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசுகையில், நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் உணர்ச்சி மிகுதியாக பேசுகிறார் அவரது பேச்சு கடந்த ஒரு வருடமாக தனக்கு வருத்தம் அளிக்கிறது.

அந்த வகையில் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் மறைந்த தலைவர்களை நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தரக்குறைவாக பேசுவது வருத்தம் அளிக்கிறது. இதை அவர் தான் திருத்திக் கொள்ள வேண்டும்

திமுகவிற்கு செல்வாக்கு உள்ளதாக ஸ்டாலின் பேசி வருவது பூனை கண்ணை கட்டிக் கொண்டால் உலகமே இருண்டது என்பது போல உள்ளது. மேலும் மக்களை ஏமாற்றுவதில் தான் செல்வாக்கு உடன் உள்ளதாகவும் குற்றச் சாட்டை தெரிவித்தார் தொடர்ந்து பேசிய அவர், திமுகவின் வெற்றிக்கு அதிமுக மறைமுகமாக உதவுகிறது.

இதை 2026 சட்டமன்றத் தேர்தலில் முறியடிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

# சாலையில் உள்ள பள்ளத்தை சீரமைக்க கோரிக்கை



விழுப்புரம், நவ. 8-

விழுப்புரம் மாவட்டம் காணை ஊராட்சி ஒன்றியமாக இருந்து வரும் நிலையில் காணை அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார் 700 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இந்நிலையில் நாள்தோறும் மாணவ, மாணவிகள் வழக்கமாக நடந்து செல்லும் வழியில் மூன்று மாதத்திற்கு முன்பு பாலம் உடைந்த நிலையிலும் அந்த பாலம் ஆபத்தான நிலையிலும் உள்ளது. இந்த பாலத்தை சரி செய்ய இதுவரை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் யாரும் முன்வரவில்லை. பள்ளி மாணவ, மாணவிகளின் நலன் கருதியும் பாதுகாப்பாக பள்ளி செல்லவும் நடவடிக்கை எடுக்க முன்வருமா மாவட்ட நிர்வாகம் என பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

## ENROLMENT NOTICE

After Ten days of the publication of this notice and within Three Months thereafter, A.Akshaya, D/o Annamalai, Aged 22 years, Permanently residing at No. 85, Pillaiyar koil Street, Kunichampet Puducherry - 605501, intend having my enrolment as an advocate moved before the Bar Council of Tamilnadu and Puducherry, Bar Council Buildings, High Court Campus, Chennai – 104.

Those who have any valid Objections may notify the same to the Bar council within 10 days.


A.AKSHAYA

# காரைக்காலில் ரெஸ்டோ பார்களை மறு ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்

## இந்து முன்னணி நகரத் தலைவர் வலியுறுத்தல்

காரைக்கால், நவ. 8–

காரைக்காலில் அண்மையில் அனுமதி வழங்கப்பட்ட ரெஸ்டோ பார்களை மறு ஆய்விற்கு உட்படுத்த வேண்டும். என காரைக்கால் மாவட்ட இந்து முன்னணி நகரத் தலைவர் ராஜ்குமார் வலியுறுத்தியுள்ளார்.



காரைக்கால் மாவட்ட இந்து முன்னணி நகரத் தலைவர் ராஜ்குமார் இதுகுறித்து காரைக்கால் மாவட்ட துணை கலெக்டரிடம் வழங்கி உள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது, காரைக்கால் மாவட்டம் முழுவதும், ஏற்கெனவே. சாராயக்கடைகள், கள்ளுக் கடைகள். மதுபானக் கடைகள், ஹோட்டலில் நடத்தப்படும் மதுக்கடைகள் என அதிக எண்ணிக்கையில் உள்ள நிலையில், சமீபகாலமாக குறைந்தது 8 ரூம்கள் உள்ள லாட்ஜ்களுக்கு, ரெஸ்டோ பார் அனுமதி வழங்கி, தெருவிற்கு தெரு மதுக்கடைகள் அமைத்து காரைக்கால் கோவில் நகரம் என்ற பெருமையை அழிக்கும் விதமாக பொதுமக்களும், பக்தர்களும், சுற்றுலா வரும் பயணிகளும், முகம் சுளிக்கும் வகையில் உள்ளதுடன், உள்ளூர் மக்களும், மாணவ, மாணவிகளும் வீட்டை விட்டு வெளியே வரமுடியாத சூழ்நிலை அமைந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் காரைக்காலுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தெருவுக்குத் தெரு உள்ள மதுபார்களைப் பார்த்து எள்ளி நகையாடுகின்றனர். மேலும், சமீபகாலமாக அனுமதி கொடுக்கப்பட்ட ரெஸ்டோ பார்கள், பள்ளிக் கூடம். கோவில், பதிவு அலுவலகம், மருத்துவக் கல்லூரி, பெண்கள் விடுதி அருகில் என அனுமதி கொடுக்கப்பட்டு இயங்கி வருகிறது. அப்படி கொடுக்கப்பட்ட கட்டிடம், காரைக்கால் நகரமைப்புக் குழும அனுமதி பெறாத கட்டிடமாகவும், அந்த கட்டிடத்திற்குரிய வாகனம் நிறுத்துமிடம் இல்லாமல் உள்ளதாகவும் அறிகிறோம். கடற்கரையிலிருந்து 500 மீட்டர் மற்றும் அரசலாறு ஆற்றங்கரையிலிருந்து 100 மீட்டர் வரை கட்டப்படும் கட்டிடங்கள் கடற்கரை மேலாண்மை வாரிய அனுமதி பெற்று கட்ட வேண்டும் என்ற விதியை மதிக்காமல் கட்டிய கட்டிடத்திற்கும், ரெஸ்டோ பார் அனுமதி அளிக்கப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. மேலும், அனுமதிக்காக பலர் காத்திருப்பதும் தெரிகிறது. எனவே, விதியை மீறி கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் இயங்கும் ரெஸ்டோ பார்களின் அனுமதியை மறு ஆய்வு செய்து, ரத்து செய்யவும், புதிதாக எந்தவித ரெஸ்டோ பார்கள் அனுமதி எதையும் அளிக்காமல் காரைக்கால் பொதுமக்களையும், மாணவ, மாணவிகளையும், பக்தர்களையும், சுற்றுலா பயணிகளையும் காக்க ஆவன செய்யுமாறு மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

முக்கியமாக இதற்கான அனுமதி வழங்கிய அதிகாரி ஒருவர் கோவில் நில மோசடியில் கைது செய்யப்பட்டு இருப்பதால் இந்த அனுமதியிலும் முறைகேடு நடந்திருக்கலாம் என அச்சம் வந்துள்ளது. மேலும் இது போன்ற ரெஸ்டோ பார்கள் அனைத்திலும் பாட்டிலாக வழங்காமல் பெக் கணக்கில் மட்டுமே வழங்க வேண்டும். ஆனால் இந்த விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை. அங்குள்ள கேண்டின்கள் முறையாக செயல்படுவதில்லை.

இதை உணவு பாதுகாப்புத்துறை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# திருநள்ளாறில் பட்டா பெயர் மாற்றம் சிறப்பு முகாம்



காரைக்கால், நவ. 8–

காரைக்கால் திருநள்ளாறில் பட்டா பெயர் மாற்றம் தொடர்பான சிறப்பு முகாம் நடந்தது. இதில் 40 பேருக்கு பெயர் மாற்றம் செய்த பட்டாக்களை கலெக்டர் மணிகண்டன் வழங்கினார் வழங்கினார்

காரைக்கால் மாவட்ட கலெக்டர் மணிகண்டன் தலைமையில், பொது மக்கள் குறைகளை தீர்க்கும் முகாம், மக்களை தேடி மாவட்ட கலெக்டர், மாணவர் கலெக்டர், விவசாயிகள் குறைதீர் முகாம், போன்ற பல்வேறு செயல் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில், மக்களை தேடி மாவட்ட கலெக்டர் என்ற செயல் திட்டமானது, காரைக்கால் மாவட்ட மக்களிடம் மிகுந்த வரவேற்பினை பெற்றுள்ளது. மக்களை தேடி மாவட்ட கலெக்டர் என்ற நிகழ்வின் ஒரு பகுதியாக, நேற்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரையில், காரைக்கால் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில், காரைக்கால் திருநள்ளாறு மற்றும் நெடுங்காடு கொம்யூன் பகுதியைச்சேர்ந்த மக்களுக்கு பட்டா பெயர் மாற்றம் தொடர்பான சிறப்பு முகாம் நேர்று நடைபெற்றது.

முகாமிற்கு, கலெக்டர் மணிகண்டன் தலைமை தாங்கினார். முகாமில், காரைக்கால் மாவட்ட துணை கலெக்டர் அர்ஜுன் ராமகிருஷ்ணன், மாவட்ட வருவாய் துறை சார்ந்த அனைத்து அதிகாரிகளும் முகாமிட்டு மக்களிடம் மனுக்களை பெற்று உடனுக்குடன் பட்டா பெயர் மாற்றம் செய்து வழங்க ஏற்பாடு செய்தார்கள். மேலும், அங்கு முகாமிட்டிருந்த அதிகாரிகள் பொது மக்களிடம் பட்டா பெயர் மாற்றம் குறித்து தகுந்த ஆலோசனைகளை பெற்றார்கள். இறுதியாக, கலெக்டர் மணிகண்டன், பொதுமக்கள் நீண்ட நாட்களாக கிடைக்காமல் இருந்த 40 பட்டா பெயர் மாற்றத்தை, முகாமில், கலெக்டர் கையால் பெற்றார்கள்.

தொடர்ந்து, பொதுமக்களிடம் கலெக்டர் மணிகண்டன் குறைகளை கேட்டறிந்தார். தொடர்ந்து பொதுமக்கள் கலெக்டரை பாராட்டினர்.

# காரைக்கால் விரவி ஓ.என்.ஜி.சி சார்பில் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு விழா




காரைக்கால், நவ. 8–

காரைக்கால் விரவி ஓ.என்.ஜி.சி சார்பில் லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு விழா சிறப்பாக நடைபெற்றது.

காரைக்கால் ஓ.என்.ஜி.சி காவேரி அசெட் சார்பில், லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு வார விழா நடைபெற்று வருகிறது. அதன் ஒரு பகுதியாக, லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு கட்டுரை போட்டி, ஓவியப்போட்டி, ஸ்லோகன் எழுதுதல் மற்றும் மாரத்தான் போன்ற விழிப்புணர்வு போட்டிகள், ஓ.என்.ஜி.சி தொழிலாளர்களுக்கும், ஓ.என்.ஜி.சி பொது பள்ளி குழந்தைகளுக்கும் நடத்தப்பட்டது. போட்டியைத்தொடர்ந்து, போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் நிறைவு நாளில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் நடத்திய கலை நிகழ்ச்சிகள், ஓ.என்.ஜி.சி கலையரங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு, ஓ.என்.ஜி.சி செயல் இயக்குனர் மற்றும் அசட் மேனேஜர் உதய் பாஸ்வான் தலைமைத் தாங்கி, மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில், அசட் சப்போர்ட் மேனேஜர் மாறன், பொது மேலாளர் கண்ணூஜி, தலைமை மனிதவளம் நிர்வாகி கணேசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# கும்பகோணத்தில் சிற்ப, குத்துவிளக்கு தொழிற்பூங்கா அமைக்க கோரிக்கை

கும்பகோணம், நவ. 8–

விஸ்வகர்மா சமுதாய மக்களுக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில், முதல்வர் தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி கோரிக்கை விடுத்துள்ளனர்.

கும்பகோணம் நகர விஸ்வகர்ம சமூக சங்கம், தமிழக கம்மாளர் முன்னணி சங்கம் சார்பில் செயற்குழு கூட்டம் பத்மநாபன் தெருவில் நடைபெற்றது. சங்க செயலர் மு.மாரிமுத்து தலைமை வகித்தார், கம்மாளர் முன்னணி செயலர் டி.ஆர்.ரமேஷ் முன்னிலை வகித்தார். கராத்தே ராஜா வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் கோயம்புத்தூரில் ரூ.126 கோடிக்கு தொழில் பூங்கா அமைக்க உத்தரவிட்டு அதை உடனே செயல்படுத்த உத்தரவிட்ட முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

விஸ்வகர்ம சமுதாய மக்களுக்கு முதல்வர் தேர்தல் வாக்குறுதியில் அறிவித்தபடி கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும், கும்பகோணத்திலும் சிற்பம், குத்துவிளக்கு தொழிற் பூங்கா அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றினர். விஜயகுமார் நன்றி கூறினார், கூட்டத்தில் தலைவர் இரா. பெரியசாமி, இணைச்செயலர் த.ராஜேந்திரன், துணைத்தலைவர்கள் சு.சுபாஷ், க.ராஜேந்திரன், வலங்கை சதீஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

உச்சிப்பிள்ளையார் கோயில் சந்திப்பில் முதல்வருக்கு நன்றி தெரிவித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

# வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம்



அவலூர்பேட்டை, நவ. 8–

விழுப்புரம் வடக்கு மாவட்டம், மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம், அவலூர்பேட்டை, கோவில்புறையூர், ஊராட்சியில் செஞ்சி சட்டமன்றத் தொகுதி தேர்தல் பொருப்பாளர்,மாநில இளைஞரணி துணை செயலாளர் அப்துல்மாலிக் அவர்களுடன் வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இதில் மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் மேற்கு ஒன்றிய செயலாளர் சாந்தி சுப்ரமணியன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நெற்பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை

காரைக்கால், நவ. 8–

காரைக்கால் மாவட்ட நெற்பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு காரைக்கால் வேளாண் அறிவியல் நிலையம் மழைக்காலம் ஆலோசனைகள் வழங்கியுள்ளது.



காரைக்கால் மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் முனைவர் ரவி இது குறித்து வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது, டெல்டா மாவட்டமான காரைக்காலில் வடகிழக்கு பருவமழையின் காரணமாகவும் மற்றும் வானிலை அறிக்கையின்படியும் அடுத்த வாரத்தில் இருந்து தொடர்மழை எதிர்பார்க்கப்படுகிறது. காரைக்கால் மாவட்ட விவசாயிகள் சம்பா சாகுபடி ஏற்கனவே தொடங்கியுள்ளனர். நடுத்தர கால வயதுடைய நெல் இரகங்கள் 25 முதல் 35 நாள் வயதுடைய பயிராக உள்ளது.

உர மேலாண்மை பொறுத்தவரையில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக யூரியா கிலோ 50 + 150 கிலோ சூப்பர் + 21 கிலோ பொட்டாஸ் இட வேண்டும் (அல்லது) அடியுரமாக டி.ஏ.பி இட நேரிட்டால் டி.ஏ.பி 50 கிலோ + 30 கிலோ யூரியா + 21 கிலோ பொட்டாஸ் இட வேண்டும் (அல்லது) அடியுரமாக 17:17:17 இட நேரிட்டால் 70 கிலோ + 75 கிலோ சூப்பர் + 25 கிலோ யூரியா சேர்த்து இட வேண்டும் (அல்லது) அடியுரமாக 20:20:20 நேரிட்டால் 120 கிலோ உடன் 21 கிலோ பொட்டாஸ் இட வேண்டும்.

மேலுரமாக முதல் களை, இரண்டாவது களை மற்றும் பூக்கும் பருவத்தில் மூன்று முறை 25 கிலோ யூரியா மட்டும் போட வேண்டும். இவ்வாறு போதுமான அளவு தேவைக்கு ஏற்ப உரம் இடுவதன் மூலம் செலவை குறைத்து அதிக மகசூல் பெறலாம். வெள்ளை பொண்ணி பயிரிட்டால் மேலுறமாக யூரியா போடத் தேவையில்லை.நெற்பயிரானது 35 நாட்கள் தாண்டிய பயிர்களில் களைக்கொல்லி தெளிக்காதவர்கள் கை களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

தொடர்மழை சமயத்தில் எந்த ஒரு உரமோ அல்லது பூச்சி மேலாண்மையோ மேற்கொள்ள வேண்டாம். மழை நீர் நின்ற காரணமாக மண்ணில் உள்ள சத்துக்கள் கரைந்து சென்றதால் பயிர் வளர்ச்சிக்கு தேவையான சத்துக்கள் இல்லாத சூழல் ஏற்படும். மேலும் வேர் பகுதியில் காற்றோட்டம் இல்லாத காரணத்தாலும் பயிர் வளர்ச்சி தடைபடும். எனவே பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்க கீழ்கண்ட பயிர் சாகுபடி தொழில்நுட்ப முறையில் மேற்கொள்ளலாம். வயலில் போதிய வடிகால் வசதி மூலம் நீரை வடிகட்ட வேண்டும். நெற்பயிர் சாகுபடி நிலத்தில் மழை நீர் தேங்கி இருந்தால் அவசர கால நடவடிக்கையாக நெற்பயிருக்கு இலை வழி தெளிப்பாக போரான் 300 கிராம், ஜிங்க் சல்பேட் ஒரு கிலோ, பெர்ரஸ் சல்பேட் ஒரு கிலோ மற்றும் யூரியா 200 கிராம் 200 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பானை கொண்டு தெளிக்க வேண்டும் (அல்லது) ஒரு கிலோ டி.ஏ.பி 20 லிட்டர் நீரிலும் மற்றும் ஒரு கிலோ ஜிங்க் சல்பேட் 10 லிட்டர் நீரிலும் ஒரு நாள் இரவு முழுவதும் தனித்தனியாக ஊறவைத்து மறுநாள் காலை தெளிந்த நீரை வடிகட்டி 200 லிட்டராக பெருக்கி ஒரு ஏக்கருக்கும் கைத்தெளிப்பானை கொண்டு காலை அல்லது மாலை வேளையில் தெளிக்க வேண்டும். இதன் மூலம் புதிய வேர்கள் தோன்றி வாடிய நிலையில் உள்ள நெற்பயிகள் மீட்சியடையும். நெற்பயிரின் இலையில் நுனியில் மட்டும் மஞ்சள் நிறமாக இருந்தால் ஒரு கிலோ யூரியா உடன் 500 கிராம் துத்தநாகம் 100 லிட்டர் தண்ணீரில் கலந்து இலை வழியாக கைத்தெளிப்பனை கொண்டு தெளிக்க வேண்டும். இயற்கை முறையில் நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பஞ்சகாவியம் 3 லிட்டர் (அல்லது) மீன் அமிலம் 500 மில்லி (அல்லது) தேமோர் கரைசல் 500 மில்லி 200 லிட்டராக பெருக்கி ஒரு ஏக்கருக்கும் கைத்தெளிப்பானை கொண்டு 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கலாம்.

மழை நீர் வடிந்த பின் ஏக்கருக்கு 30 கிலோ அமோனியம் சல்பேட் 15 கிலோ மீயுரேட் ஆஃப் பொட்டாஸ் மற்றும் 10 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும் அல்லது 22 கிலோ யூரியா, 18 கிலோ ஜிப்சம், 5 கிலோ வெப்பம் புண்ணாக்கு மற்றும் 17 கிலோ மீயுரேட் ஆஃப் பொட்டாஸ் உரகங்களை மேலுறமாக ஒரு ஏக்கருக்கு இட வேண்டும். இந்த சூழலில் பூச்சி மற்றும் நோய் தாக்குதல் இருக்க வாய்ப்புள்ளது. அதற்கு ஒரு கிலோ உயிர் எதிரி பாக்டீரியாவான பேசிலஸ் மூமற்றும் ஒரு லிட்டர் புளித்த தயிரை 200 லிட்டர் நீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். பூச்சிகளை கட்டுப்படுத்த வேப்ப எண்ணெய் 1000 றிறிவி அளவில் இலை நனையும்படி தெளிக்கவும். இலை சுருட்டுபுழுவை கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான ட்ரைக்கோகிரம்மா கைலோனிஸ் பயிர் நடவு செய்து 37, 44 மற்றும் 51 நாட்களில் மொத்தம் மூன்று முறை 5 சிசி என்ற அளவில் ஒரு ஹெக்டருக்கு விட வேண்டும். வயல் வரப்புகளை களைகளை அகற்றி சுத்தமாக வைத்தல் வேண்டும். இலை சுருட்டு புழு தாக்குதல் பொருளாதார சேத நிலையான 10 சதவிகிதத்திற்கு மேல் தாண்டும்போது இரசாயன பூசிக்கொல்லி மருந்தான புளூபென்டிமைட் 39.35 % எஸ்.சி ஒரு ஏக்கற்கு 20 மில்லி ஒட்டும் பசை சேர்த்து காலை அல்லது மாலை வேலையில் தெளித்து கட்டுபடுத்தலாம்.

தண்டு துளைப்பான் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணிகளான டிரைக்கோடெர்மா ஜப்பானிக்கம் எக்டருக்கு 5 சிசி என்ற அளவில் நடவு செய்து ஒரு மாதம் முதல் வார இடைவெளியில் மூன்று முறை விட வேண்டும். மேலும் ஏக்கருக்கு ஒரு விளக்கு பொறி அமைத்து மாலை வேலையில் எரியவிட்டு தாய் அந்து பூசிகளை கவர்ந்து அழிக்கலாம். இதனுடன் ஒரு ஏக்கருக்கு 10 பறவைகள் தாங்கி, 5 இனகவற்சி பொறி அமைத்து கட்டுபடுத்தலாம்.

மேலும் தாக்குதல் பொருளாதார சேத நிலையை தாண்டும்போது ரசாயன பூசிக்கொல்லி மருந்தான குளோரோடேரேனிலிபுருள் 18.5 எஸ்.சி ஹெக்டேருக்கு 150 மில்லி ஒட்டும் பசை சேர்த்து காலை அல்லது மாலை வேலையில் தெளித்து கட்டுபடுத்தலாம். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# சேலத்தில் 6 புதிய பேருந்து சேவை அமைச்சர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார்

சேலம், நவ. 8-

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்ட புறநகர் வழித்தடத்திற்கு 6 புதிய பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் சேலம், புதிய பேருந்து நிலையத்திலிருந்து இன்று துவக்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், மசுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய பிஎஸ்6 வகை பேருந்துகளாக இயக்க தொடர்ச்சியாக நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.



அந்தவகையில், சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து தற்சமயம் இயங்கிக் கொண்டிருக்கும் புறநகர் வழித்தட பேருந்துகளுக்கு பதிலாக 6 எண்ணிக்கையிலான புதிய பிஎஸ் 6 வகை புறநகர் பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சேலத்திலிருந்து பொள்ளாச்சிக்கு 3 புதிய பேருந்துகளும், சேலத்திலிருந்து சென்னைக்கு 2 புதிய பேருந்துகளும், சேலத்திலிருந்து மதுரைக்கு ஒரு புதிய பேருந்தும் என 6 புதிய பேருந்துகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்றையதினம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் மூலம் சேலம் மாவட்டத்திற்கு 15 நகரப் பேருந்துகளும், 76 புறநகரப் பேருந்துகளும் என மொத்தம் 91 புதிய பிஎஸ் 6 வகை புறநகர் பேருந்து சேவைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று, சாதாரண கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பேருந்து பயணம் மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் மகளிருக்கான விடியல் பயணத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. அந்தவகையில், சேலம் மாவட்டத்தில் மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் ஏறத்தாழ 30.59 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ராமச்சந்திரன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் அருள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சிவலிங்கம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக சேலம் கோட்ட மேலாண்மை இயக்குநர் ஜோசப் டயஸ், பொது மேலாளர் கோபால கிருஷ்ணன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# விண்வெளி தொழில்நுட்ப காட்சி அரங்கம் திறப்பு




நெல்லை, நவ. 8-

திருநெல்வேலி மாவட்டம் மாவட்ட அறிவியல் மையத்தில் விண்வெளி தொழில்நுட்ப காட்சி அரங்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கார்த்திகேயன் திறந்து வைத்தார்கள்.

திருநெல்வேலி கொக்கிரகுளம் பகுதியில் அமைந்துள்ள மாவட்ட அறிவியல் மையத்தில் பொதுமக்கள், மாணவர்கள் விண் வெளி குறித்து தெரிந்துகொள்ளும் வகையில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் புதியதாக உருவாக்கப்பட்ட விண்வெளி தொழில்நுட்ப காட்சி அரங்கத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் கார்த்திகேயன், தென்மண்டல அறிவியல் தொழில்நுட்ப அருங்காட்சியக இயக்குனர் சஜூ பாஸ்கரன் முன்னிலையில் திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

நாடுமுழுவதும் ஒன்றிய அரசின்கீழ் 27 மாவட்ட அறிவியல் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தென்மண்டலத்தில் மட்டும் தமிழகத்தின் நெல்லை மாவட்ட அறிவியல் மையம் உள்பட ஐந்து மையங்கள் செயல்பட்டு வருகிறது. நெல்லை மாவட்ட அறிவியல் மையத்தில் அறிவியல் மற்றும் விஞ்ஞானபூர்வமான செய்திகளை தெரிந்து கொள்ளும் வகையில் ஏராளமான பொருட்கள் வைக்கப்பட்டு, சிறப்பாகஇயங்கி வருகிறது.

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் விண்வெளி குறித்து அறிந்துகொள்ளும் வகையில் விண்வெளி தொழில் நுட்பகாட்சி அரங்கம்ரூ.40 லட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கில்விண் வெளியில் செயற்கைகோள் செயல்படும்விதம், விண்வெளிக்கு செல்லும் மனிதமாதிரி, விண்வெளி மைய செயல்பாடுகள், ராக்கெட்பற்றிய குறிப்புகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் வகையில் நவீனதொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற விண்வெளிதொழில் நுட்பகாட்சி அரங்கம் பெங்களூர் விஸ்வேஸ்வரய்ய அருங்காட்சியகத்தில் உள்ளது. இரண்டாவதாக நெல்லை அறிவியல் மையத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், அண்ணா பல்கலைக்கழக முதல்வர் செண்பகவிநாயகமூர்த்தி, அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் நவராம்குமார், மாவட்ட அறிவியல் மைய அலுவலர் முத்துகுமார் மற்றும் மாணவ, மாணவிகள் பலர் கலந்துகொண்டனர்.

# வளர்ச்சி திட்டப்பணிகளை ஆட்சியர் ஆய்வு

ஈரோடு, நவ. 8-

ஈரோடு மாவட்டம், புஞ்செய்புளியம்பட்டி, சத்தியமங்கலம், பவானி சாகர் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வுமேற் கொண்டார்.



இந்த ஆய்வின்போது, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர், புஞ்செய் புளியம்பட்டி நகராட்சி வார்டு எண் 18, ராமநாதபுரம் பகுதியில் கட்டப்பட்டுவரும் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி பணியினை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, புஞ்செய்புளியம்பட்டி நேருநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், எண்ணும் எழுத்தும் திட்டத்தின் கீழ் மாணவ, மாணவியர்களின் வாசிப்பு மற்றும் கற்றல் திறன் குறித்துநேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1.05 கி.மீ நீளத்திற்கு ரூ.32.02 லட்சம் மதிப்பீட்டில் அரியப்பம்பாளையம் தபோவனம் செல்லும் சாலைவலுப்படுத்தும் பணிகளையும், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், விண்ணப்பள்ளி ஊராட்சி பாரதிநகர் பகுதியில் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ரூ.111.60 லட்சம் மதிப்பீட்டில் 36 வீடுகள் கட்டப்பட்டு வருவதையும், பவானிசாகர் அணை நீரேற்றுநிலையம், புஞ்செய்புளியம் பட்டி நகராட்சியில், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.52.07 கோடி மதிப்பீட்டில் நடைபெற்றுவரும் குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளையும், ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றியம் நஞ்சப்பகவுண்டன்புதூர் காலனி, கோண மூலை பகுதியில் ஊரக வீடுகள் சீரமைத்தல் திட்டத்தின் கீழ் ரூ.55,000 மதிப்பீட்டில் நடைபெற்று வரும் வீடு சீரமைக்கும் பணியினையும், அதே பகுதியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சிதிட்டத்தின் கீழ் ரூ.30.10 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி அலுவலகம் கட்டப்பட்டு வருவதையும், சத்தியமங்கலம் பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் கலைஞர் நகர்ப்புறமேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.303.00 லட்சம் மதிப்பீட்டில் 40 கடைகள் மற்றும் 130 திறந்த வெளிகடைகளுடன் வாரச்சந்தை மேம்படுத்தும் பணியினையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட் டிற்கு வழங்கிட அலுவலர் களுக்கு உத்தரவிட்டார். தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சார்பில் இயங்கும் சத்தியமங்கலம் அரசு மாணவர்கள் விடுதியில் ஆய்வு மேற்கொண்டு, மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு, அடிப்படை வசதிகள், சுகாதாரம் ஆகியவை குறித்து கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் அளுக்குளி காரப்பாடிரோடு ஜெ.ஜெ நகர் 40 கி.மீ நீளத்திற்கு புதிய பாலம் கட்டும் பணியினையும், கரட்டுப்பாளையம் பகுதியில் ரூ.1.02 கோடி மதிப்பீட்டில் ஜிம்னாஸ்டிக் மைதானம் கட்டப்பட்டு வருவதையும், கோபிசெட்டிபாளையத்தில் செயல்பட்டுவரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தினையும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வுமேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின் போது, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) சதீஸ், உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, முதன்மை கல்வி அலுவலர் சுப்பாராவ், புஞ்செய்புளியம்பட்டி மற்றும் சத்தியமங்கலம் நகராட்சி ஆணையர்கள், புஞ்செய்புளியம்பட்டி, பவானிசாகர் மற்றும் சத்தியமங்கலம் வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# அண்ணா திடலில் கட்டப்பட்டுள்ள கடைகள் விரைவில் வியாபாரிகளிடம் ஒப்படைப்பு

## நேரு எம்.எல்.ஏ.,விடம் நகராட்சி ஆணையர் உறுதி



புதுச்சேரி, நவ. 8-

ஸ்மார்ட் சிட்டி திட்ட நிதி உதவியுடன் புதுச்சேரி அண்ணா திடல் புதுப்பிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அண்ணா திடலை சுற்றியுள்ள அண்ணாசாலை, லப்போர்த் வீதி, சின்ன சுப்பராய பிள்ளை வீதிகளில் புதிதாக கடைகள் கட்டப்பட்டுள்ளது. இந்த கடைகள் வியாபாரிகளிடம் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை.

இந்த நிலையில் நேரு எம்.எல்.ஏ., புதுச்சேரி நகராட்சி ஆணையர் கந்தசாமியை அண்ணா திடல் வியாபாரிகளுடன் நேரில் சென்று சந்தித்தார். அப்போது 3 ஆண்டாக வியாபாரம் செய்ய முடியாமல் கடை உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, கடை நடத்திய மற்றும் நகராட்சி உரிமம் பெற்ற வியாபாரிகளிடம் கடைகளை விரைந்து ஒப்படைக்குமாறு வலியுறுத்தினார். ஆணையர் கந்தசாமி கடைகளை ஒதுக்க கோப்புகள் தயார் செய்யப்பட்டு தற்போது உள்ளாட்சித்துறை இயக்குனர் அலுவலகத்தில் இருப்பதாகவும், இன்னும் சில தினங்களில் முதலமைச்சர் கடைகளின் சாவியை ஒப்படைப்பார் என தெரிவித்தார். அப்போது நகராட்சி செயற்பொறியாளர் சிவபாலன், வருவாய் அதிகாரி பிரபாகரன் மற்றும் கடை வியாபாரிகள் உடன் இருந்தனர்.

# விண்ணை பிளந்த அரோகரா கோஷம் சூரபத்மனை வதம் செய்த முருகப் பெருமான்...

(முதல் பக்க தொடர்ச்சி)

தொடங்கி,12 மணிக்கு யாகசாலையில் தீபாராதனை நடைபெற்றது. 12.45 மணிக்கு சுவாமி தங்க சப்பரத்தில் சண்முக விலாசம் வந்து அங்கு தீபாராதனைக்குப்பின் மாலை 4.30 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் சஷ்டி மண்டபத்தில் அபிஷேகம் நடைபெற்று அலங்கார தீபாராதனைக்கு பின் தங்க தேரில் சுவாமி, அம்பாள் கிரி வீதி உலா வந்து கோவில் சேர்தல் நடைபெற்றது.

இந்த நிலையில் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று (வியாழக்கிழமை) தொடங்கியது. இதையொட்டி இன்று மதியம் 2 மணிக்கு திருவாவடுதுறை ஆதீனம் சஷ்டி மண்டபத்தில் சுவாமி ஜெயந்தி நாதருக்கு பல்வேறு வகையான அபிஷேக பொருட்களால் அபிசேகம் நடைபெற்று தீபாராதனைக்கு பின்னர் சுவாமி ஜெயந்தி நாதர் கடற்கரையில் எழுந்தருளினார்.

அங்கு முதலில் சுவாமி ஜெயந்தி நாதர் தன்னிடம் போரிட வரும் யானை முகம் கொண்ட சூரனையும், 2வதாக சிங்கமுகன், 3வதாக தன் முகம் கொண்ட சூரனையும் வதம் செய்கிறார். இறுதியில் மரமாக மாறிய சூரனை சுவாமி ஜெயந்தி நாதர் சேவலாகவும், மயிலாகவும் மாற்றி தன்னோடு ஐக்கியமாக்கி கொள்ளும் நிகழ்ச்சி நடைபெற்றது

திருவிழாவின் சிகர நிகழ்ச்சியான சூரசம்ஹாரம் இன்று மாலை கோலாகலமாக தொடங்கி நடைபெற்றது. முருகப் பெருமானான சுவாமி ஜெயந்திநாதர், சூரனை வதம் செய்வதற்காக வென்பட்டு உடுத்தி, வெட்டிவேர் மயில் தோகை மாலை அணிந்து கடற்கரைக்கு வருகை தந்தார்.

அதன்படி, முதலில் மாயையே உருவாக கொண்ட யானைமுகம் கொண்ட தாரகாசூரன் தனது பரிவாரங்களுடன் முருகபெருமானிடம் போரிடுவதற்காக, அவரை மூன்றுமுறை சுற்றி வந்து சுவாமிக்கு எதிராக நின்றான். 4.54மணிக்குமுருகபெருமான் வேல் கொண்டு தாரகாசூரனை வதம் செய்தார்.

அதன்பிறகு கன்மமே உருவாக கொண்ட சிங்கமுகாசூரன், முருகபெருமானை வலமிருந்து இடமாக மூன்றுமுறை சுற்றி வந்து, நேருக்கு நேர் போரிட தயாரானான். 5.09 மணிக்கு சிங்கமுகாசூரனையும் முருகபெருமான் வேலால் சம்ஹாரம் செய்தார்.

தொடர்ந்து சூரபத்மன் தனது படைவீரர்களுடன் வேகமாக முருகபெருமானுடன் போர் புரிய வந்தான். தொடர்ந்து 5.22 மணிக்கு முருக பெருமான் வேல் எடுத்து சூரபத்மனை அழித்தார். இறுதியாக மாமரமும், சேவலுமாக உருமாறி வந்த சூரபத்மனை முருகபெருமான் சேவலும், மயிலுமாக மாற்றி ஆட்கொண்டார். சேவலை தனது கொடியாகவும், மயிலை வாகனமாகவும் வைத்து கொண்டார்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

E-mail:maalaiexpresspdy@gmail.com
• வெள்ளி • நவம்பர் 8, 2024
மாலை எக்ஸ்பிரஸ்

# திமுக பாக முகவர்கள் கூட்டம்




**புதுச்சேரி, நவ. 8-**

தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர், கழகத் தலைவர் தொகுதி மேற்பார்வையாளர் கூட்டத்தில் அறிவித்ததின் அடிப்படையில், வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் முகாம் குறித்து, திமுக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று லப்போர்த் வீதியில் உள்ள திமுக தலைமைக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

மாநில கழக அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அவர்கள், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர், கழகத் தலைவ சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தொகுதி மேற்பார்வையாளர் கூட்டத்தில் அறிவித்ததின் அடிப்படையில், புதுச்சேரி தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அட்டவணைப்படி, 09.11.11.2024 மற்றும் 23.24.11.2024 ஆகிய தேதிகளில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்காளர் பெயர் சேர்த்தல், நீக்கல் குறித்தும், அதில் கழக நிர்வாகிகள் மற்றும் பாக முகவர்கள் (பி.எல்.ஏ.ரு 2) எப்படி ஈடுபாட்டுடன் செயல்பட வேண்டும் என்பது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார்.

இந்த கூட்டத்தில், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. குமார், அ. தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பூ. மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே. கார்த்திகேயன், வெ.ராமசாமி, பெ. வேலவன், எஸ். தர்மராஜன், ஆர். கோகுல், ஆர். ரவீந்திரன், டி. செந்தில்வேலன், டாக்டர் கா. மாயக்கிருஷ்ணன், பெ. பழநி, மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர.சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப.வடிவேல், ஜெ.மோகன், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க.ராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே.ராதாகிருஷ்ணன் மற்றும் அணித் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் தொகுதி வாரியான பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

# வில்லியனூர் பெருமாள்புரத்தில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி

## எதிர்க்கட்சித் தலைவர் சிவா தொடங்கி வைத்தார்



**புதுச்சேரி, நவ. 8-**

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதிகுட்பட்ட வில்லியனூர், பெருமாள்புரம் குறுக்குத் தெருக்களுக்கு வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து மூலம் ரூபாய். 32 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் சிமெண்ட் கான்கிரீட் சாலை மற்றும் பக்கவாட்டு கழிநீர் வாய்க்கால் சீரமைக்கும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான சிவா கலந்துகொண்டு சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை பூஜை செய்து தொடங்கி வைத்தார். இதில் வில்லியனூர் கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் ரமேஷ், செயற்பொறியாளர் திருநாவுக்கரசு, இளநிலைப் பொறியாளர் சத்தியநாராயணா, ஊர் முக்கியஸ்தர்கள் திலகர், செந்தமிழ் செல்வன், தயாளன், சுப்பிரமணி, ரஞ்சித், திருமுருகன், திரு குமரேசன், சுந்தரராசு, சுதர்சன், பன்னீர்செல்வம், சிவக்குமார், செந்தில் வேலன் மற்றும் திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, செல்வநாதன், தர்மராஜ், இலக்கிய அணி அமைப்பாளர் சீனு மோகன்தாசு, வர்த்தக அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் ஆறுமுகம், தொமுச பேரவைத் தலைவர் அங்காளன், அயலக அணி தலைவர் தாஹா,தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், தொகுதி செயற்குழு உறுப்பினர் சுப்பிரமணியன், கதிரவன், சபரி, காளிதாஸ், ஏழுமலை, தங்கராசு, மிலிட்டரி முருகன், வீரக்கண்ணு, கார்த்திகேயன், நடராஜன், கமால் பாஷா, பிரவீன், அபிமன்னன், மோகன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மாற்றுத்திறனாளிகள் சிறப்பு குறைத்தீர்வு நாள் கூட்டம்



வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைத்தீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை பெற்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். அருகில் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) கலியமூர்த்தி.

# புதிய வழித்தட பேருந்து சேவை துவக்கம்




புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் பேருந்து நிலையத்திலிருந்து, புதிய வழித்தட பேருந்து சேவையினை அமைச்சர் மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா தலைமையில் கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரன், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த்.

# விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி



சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் சேலம் மாவட்டத்தில் 2024-25ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் நிகழ்ச்சி கருப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி, மேட்டூர் சார் ஆட்சியர் பொன்மணி.

# மாணவர்களுடன் ஆட்சியர் கலந்துரையாடல்



வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி பொய்கை அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாடினார். அருகில் வட்டாட்சியர் வேண்டா.

# விஜயுடன் ஒரே மேடையில் பங்கேற்பதை உறுதி செய்த திருமாவளவன்

**சென்னை, நவ. 8-**

சென்னையில் டிசம்பர் 6ந்தேதி நடைபெறும் அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் விசிக தலைவர் திருமாவளவன் பங்கேற்கும் நிகழ்ச்சியில் தவெக தலைவர் விஜய்க்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதனால் இருவரும் ஒரே மேடையில் பங்கேற்பார்களா? கூட்டணி குறித்த பேச்சுவார்த்தையும் நடைபெறுமா? என்ற கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்நிலையில் விகடனின் அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்பது குறித்து விசிக தலைவர் திருமாவளவன் கூறியதாவது:

* விஜய் நிகழ்ச்சியில் பங்கேற்பார் என்று மட்டுமே தெரிவிக்கப்பட்டது.

* விஜய் பங்கேற்பார் என தெரிவித்தபோது தவெக மாநாடு நடைபெறவில்லை.

* முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புத்தகத்தை வெளியிட நான் பெற்று கொள்வதாகவே திட்டமிடப்பட்டது.

* நூல் வெளியீட்டு விழாவிற்கு அரசியல் உள்நோக்கம் கற்பிப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

* இன்னொரு கூட்டணிக்கு போவதற்கு என்ன தேவை எழுந்துள்ளது.

* நூல் வெளியீட்டு விழாவில் பங்கேற்பதாலே அணி மாறி விடுவோம் என்பது எந்த வகை உளவியல்?

விசிக அணி மாறிவிடும் என விமர்சித்தவர்களுக்கு கேள்வி எழுப்பிய திருமாவளவன், விஜயுடன் ஒரே மேடையில் பங்கேற்பதை உறுதி செய்துள்ளார்.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com Ph : 0413-2226989, 9842335007




# முதல்வர் தலைமையில் ஆலோசனை கூட்டம்

# 2 பயங்கரவாதிகள் என்கவுண்டரில் சுட்டுக்கொலை

# தங்கம் விலை திடீர் உயர்வு


மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

• 8-11-2024 வெள்ளிக்கிழமை •வெளியூர்: 9-11-2024 சனிக்கிழமை •பக்கம் 6 • ரூ.600 காசுகள்